தமிழக சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1968 மரர்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை **மண்ட** பத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் **தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

Trade and Industries Fair at Madras.

*140 *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to the answer to Question No. 348, on the floor of the Assembly on 15th July 1967:

(*a*) whether a separate Madras Government pavilion is to be constructed in the Indian International Trade and Industries Fair to be held in Madras in 1968;

(*b*) if so, the estimated cost thereof; and

(*c*) the main features of the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) தமிழக அரசின் அரங்கம் கட்டப்பட்டு, அதை தினந்தோறும் பொது மக்கள் ஏராளமாக வந்து பார்வையிடுகின்றனர்.

(இ) அரங்கத்தைக் கட்டி முடித்து, நிர்வகிக்கும் செலவு கிட்டதட்ட பதினைந்து லட்ச ரூபாய் ஆகிறது.

(உ) நாட்டின் இன்றியமையா ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழில், பொதுப்பணி, வேளாண்மை போன்ற பல்வேறு துறைகள் இப்பொருட்காட்சியில் பங்கு கொண்டு அரசு மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களையும் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

Thiru K. VINAYAKAM: Sir, this question was put even in July last year. Subsequently, this pavilion has been constructed at our cost. Have the Government any statistics to show how many visitors have visited our pavilion in particular? Though the Members of the Legislature were given an opportunity to visit this Exhibition, they were not able to utilise the opportunity fully. So, will the Government consider the desirability of setting apart one day with necessary conveyances to take all the Members of this House together in a bunch so that they may get the facility of visiting this pavilion?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நமது தமிழக அரசின் சார்பாக அமைத்துள்ள காட்சிக் கூடத்திற்கு எவ்வளவு பேர்கள் வந்தார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. ஆனல் கண்காட்சிக்கு எவ்வளவு பேர்கள் வந்தார்கள் என்ற கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. வெளியே போகின்ற வர்களை குறிவைத்து கணக்கு எடுக்கப்படுகிறது. ஆகையால்தான எந்தெநத கூடத்திற்கு எவ்வளவு அதிகம் பேர்கள் வந்தார்கள்? எவ்வளவு குறைவான பேர்கள் வந்தார்கள்? என்பது தெரியாது. இதுவரையிலும் காட்சிக்கு

வந்து பார்த்தவர்கள் 18 லட்சம் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களும், பேரவை உறுப்பினர்களும் கண்காட்சிக்கு போய் வருவதற்கு சென்ற முறை ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு நாட்கள் பேரவை உறுப்பினர்களுக்கும், ஒரு நாள் மேல் அவை உறுப்பினர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. மற்றுமுள்ள உறுப்பினர்கள் அதைக் காண வேண்டுமென்று விரும்பினால், அதற்காக இம்மாதம் 11–ம் தேதிக்குள் ஏற்பாடு செய்யலாம்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்த உலக வாணிப, தொழில் கண்காட்சிகளை எல்லாம் நிரந்தரமாக வைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கண்காட்சி சாலைகளை நிரந்தரமாக வைப்பது என்பது இயலாது. சிலர் பெரும் பொருள் செலவு செய்து நிலைத்திருக்கும்படி சில கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். தற்காலிகமாகக் கட்டி அவற்றைப் பார்க்கும்படியாகச் செய்து சில பேர்கள் கட்டியிருக்கிறார்கள். எல்லா அரசாங்கத்தினரையும் வெளிநாட்டினரையும் நிலைத்திருக்கின்ற கட்டடத்தை அப்படியே விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இதைப்பற்றி முடிவு சொல்லும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள். பிரிக்கப்படவேண்டியவை எவ்வளவு எவ்வளவு ? விட்டுவிட வேண்டியவை எவ்வளவு எவ்வளவு ? சிறு பொருள் கொடுத்து வாங்க வேண்டியவை எவ்வளவு எவ்வளவு ? என்ற விவரம் சேகரிக்குமாறு சொல்லப்பட்டிருக்கிறது. நிரந்தரமாக காட்சியை நடத்தும்போது அங்குள்ள பெரிய மாடங்கள், திறந்தவெளி அரங்கம் போன்றவைகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே அப்படியே பொருட்காட்சிக்காகவே அதை எடுத்துக் கொள்ளலாம் என்று கருதியிருக்கிறோம். தொடர்ந்து ஒரு ஆண்டுகாலத்திற்கு நடத்தமுடியாது. இடையிடையே அதை ஒரு மியூசியம் போல் வைக்கலாம். வெளியூர்களிலுள்ள மாணவர்களும் வேறு பலரும் அதைக் காண்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்ற வகையிலே யோசிக்கப்பட்டுவருகிறது.

திரு. ந. தருமலிங்கம் : இந்தத் தொழில், வாணிபப் பொருட்காட்சியில் இடம் பெற்ற வெளிநாட்டு பொருள்கள் மீண்டும் அந்த நாடுகளுக்கு அனுப்புவதற்கு திட்டம் இருக்கிறதா ? அல்லது இங்கேயே விற்பனை செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? விற்பனை செய்யும்போது தனிப்பட்ட வியாபாரிகளுக்குக் கொடுக்காமல் அரசாங்கமே வாங்கிக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொண்டுவந்த பொருள்களை சாதாரணமாக தடுக்கப்பட்ட பொருள்களை இங்கே விற்பனை செய்யலாம் என்று இந்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. முதலிலே அரசாங்கத்திற்கு விற்கிற நிலையிலேதான் இருக்கிறார்கள். அவ்வளவு பொருள்களையும் அரசாங்கமே வாங்குவதென்றால் பல கோடி ரூபாய்கள் தேவைப்படும். பொறியியல் கல்லூரிகள் மற்ற கல்லூரிகள் இவற்றிற்கு அங்கேயுள்ள பொருள்கள் தேவைப்படுமானால் அவற்றை வாங்குவதற்கு முதல் சலுகை தரப்படும் என்றும் எவ்வளவு வாங்கலாம் என்றும் யோசிக்கப்பட்டுவருகிறது. தனிப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தனியார் துறையிலுள்ள தொழில்களுக்கும் இவற்றைப் பயன்படுத்துவதற்காக இவற்றை வாங்குவதற்கு முயற்சி செய்யப்பட்டுவருகிறது. பலர் பல பொருள்களை வாங்கியிருக்கிறார்கள். நாம் வாங்குவதற்கான முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் பொருட்காட்சி மார்ச் மாதம் 11-ம் தேதிக்கு மேலும் நடைபெறுவதற்கு சிபார்சு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பொருட்காட்சி முதலிலே பிப்ரவரி 26-ம் தேதியோடு முடிவு அடைவதாக இருந்தது. பிறகு மார்ச் 11-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் நீட்டிக்க வேண்டுமென்றால் அதிக நஷ்டத்திற்கு ஆளாகும் என்ற

1968 மார்ச் 5]

கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னும் நடைபெற்றால் அதற்காகும் மின் சார வசதி, நீர் வசதி, வாடகை இவற்றிற்குசெலவு அதிகமாகும் என்பதால் மேலும் நீட்டிக்காமல் மார்ச் 11-ம் தேதியோடு இறுதியாக முடித்துவிட வேண்டுமென்ற அளவில் முடிவுக்கு வந்திருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த உலகப் பொருட்காட்சியில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற பெரிய நாடுகள் கலந்து கொள்ளவில்லையே இதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கும், இதில் கலந்துகொள்ளவேண்டுமென்று அழைப்பு விடுத்தோம். ஆனால் கலந்து கொள்வதும், கலந்து கொள்ளாததும் அவரவர்களுடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. கலந்து கொள்ளாததற்கான காரணங்களை அவர்கள் சொல்லவில்லை. நாமாக ஊகித்துச் சொல்வது உலக தன்மைக்கும், அரசியல் நிலைமைக்கும் பொருத்தம் ஆகாது. இதில் 17 வெளி நாடுகள் கலந்து கொண்டிருக்கின்றன. 13 மாநிலங்கள் காட்சிக் கூடங்களை வைத்திருக்கிறார்கள். 11 மத்திய அரசை சேர்ந்த அமைப்புகள் இடம் பெற்றுள்ளன. பொதுத் துறையைச் சேர்ந்த 21 தொழிற்சாலைகளும் தனித்தனியாக காட்சியை வைத்திருக்கிறார்கள். தனியார் தொழிற்சாலைகள் நூற்றுக்கு மேற்பட்டவைகள் பொருட்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன.

திரு. செ. கோ. விசுவநாதன் : தலைவர் அவர்களே, தமிழக அரசின் பெவிலியனும் நிரந்தரமாக்கப்பட்டு விரிவாக வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக அரசின் காட்சிக் கூடம் தற்காலிகமான காட்சிக் கூடமாகத்தான் சவுக்குக் கம்புகள் கட்டி, அதற்குமேல் ப்ளைவுட்டைப் பொருத்தி கற்சுவர்மாதிரி வர்ணங்கள் தீட்டப்பட்டிருக்கிறதே தவிர தற்காலிகமானதுதான். இவைகளை நிரந்தரமாக வைப்பதற்கில்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் கண்காட்சியினுடைய நோக்கம் அங்குள்ள பொருள்களைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது என்று கருதுகிறேன். இவைகளை தனிப்பட்ட முறையிலோ அல்லது பொதுத் துறையிலோ எடுத்துக் கொள்வதற்கு தனியார்களும் அரசாங்கமும் சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி இதுவரை எத்தனைத் தொழில்களுக்குத் தனியார் துறையில் இந்த அரசு ஊக்கத்தைத் தந்திருக்கிறது ? பொதுத் துறையில் எத்தனைத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்திருக்கிறது என்று கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து பொருட்காட்சியிலே கலந்து கொள்வதற்காக வந்திருக்கிற பல பிரதிநிதிகளோடு நம்முடைய தொழிற்துறைச் செயலாளர் அவர்களும் தொழிற்துறை இயக்குநர் அவர்களும் சந்தித்து அதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். இங்கே என்ன என்ன தொழில்களை ஆரம்பிக்கலாம், எந்த எந்த வகைகளில் உதவி செய்ய முடியும், எந்த எந்த நாடுகளிலிருந்து எவ்வளவு பணம் இந்தியாவுக்கு ஒதுக்கயிருக்கிறார்கள், எந்தப் பகுதியில் தொழிற்சாலை வைத்தால், எந்த அளவுக்கு எந்த வகையில் அவர்கள் உதவி செய்யக் கூடும் என்பதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தொழிற்சாலை வைப்பவர்கள் இந்திய அரசாங்கத்தின் அனுமதியின் பேரில், அதற்குரிய அந்நிய செலாவணியைச் தீர்மானிக்க வேண்டியிருக்கும், முதலில் தொழிற்சாலை வைப்பதற்கு இங்கே இருக்கிறவர்கள் தயாராக இருக்கிறார்களா என்ற அடிப்படைக்குறிப்புகள் திரட்டப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு ஆராய்ந்து, தொழிற்சாலை வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது தான், லைசன்ஸ் போன்ற அனுமதியைப் பெறவும், அன்னியச் செலாவணியைக் கோரவும் ஆகிய முயற்சிகளைக் மேற்கொள்ளமுடியும். ஆனால்,

பொருட்காட்சி வைத்ததன் காரணமாக, புதிய புதிய தொழிற்சாலைகள் வைக்கவேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு வந்திருக்கிறது. தனியார்த் துறையில் உள்ள பலர், தனித்தனியாகப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். சில பல தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற முறையில் பொதுவார்த் துறையில் உள்ள தொழிலதிபர்களை ஆலோசித்துக் குறிப்புகள் திரட்டப் பட்டு வருகின்றன. இப்பொழுது எந்த முடிவும் செய்வதற்கில்லை. முடிவு இதைத் தொடர்ந்துதான் வரவேண்டும்.

திரு. பெ. மலைச்சாமி : இந்தப் பொருட்காட்சியை நடத்துவதன் மூலம் கிடைக்கின்ற வருவாயில் தமிழக அரசுக்கும் பங்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதிலே நட்டம் ஏற்படும், அதை ஈடுகட்ட அரசாங்கம் முன்வருமா என்றுதான் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மிச்சப்படுத்தி அரசாங்கத்திற்குத் தரும் நிலையில் இல்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : பொருட்காட்சியில் உள்ள கோபுரம் நிரந்தரமாகவே வைக்கப்பட்டிருக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது நிலையாக இருக்கக் கூடிய மாதிரிதான் ஏழு நிலை மாடமாக எழுப்பப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, a number of countries and States have established their pavilions in the World Fair. I wish to know from the Hon. Minister for Industries whether our Government have given any financial assistance in establishing these pavilions there ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக அரசின் சார்பாக வைக்கப்பட்டிருக்கிற அந்தக் காட்சிசாலைக்கு 15 லட்ச ரூபாய் செலவழிக்கப் பட்டு, பல் வேறு துறைகளைப் பற்றிய காட்சிகள் அங்கே வைக்கப்பட்டிருக் கின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தக் கோபுரம்தான் ஏழுநிலை மாடமாக எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், ரதம் இருக்கிறதே, அது, உண்மையாகவே தமிழகத்தின் கலைக்கு ஏற்ற வகையில் நன்றாக அமைந்திருக்கிறது. அந்த ரதம் சர்க்காரால் செய்யப்பட்டதா ? அல்லது கோவிலிலிருந்து இழுத்து வரப்பட்டதா? சர்க்காரே செய்த ரதமாக இருந்தால், அதை நம்முடைய இந்தக் கோட்டைக்கு எதிரில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஒரு கோவிலில் இருந்து கொண்டுவரப்பட்ட ரதம்தான். மீண்டும் அந்தக் கோயிலுக்கே அது திருப்பி அனுப்பப்படவேண்டும்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : பொருட்காட்சியில் சிறப்பாக அமைக் கப்பட்ட நாட்டினருக்கு அல்லது மாநிலத்திற்கு பரிசு வழங்கும் உத்தேசம் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

தமிழில் தந்திச் செய்தி.

***141 வினா. : திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிற்குள் அனுப்பப்படும் தந்திச் செய்திகளைத் தமிழில் அனுப்பும் முறையினை செயல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளதா ?